செய்தி வெளியீடு எண்–661 நாள் : 05.08.2010

# செய்தி வெளியீடு

## பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தை மேலும் செம்மைப்படுத்துவதற்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் தீவிர முயற்சி

## பட்டியல் எழுத்தர்கள் தற்காலிகப் பணி நீக்கம் மற்றும் துறை நடவடிக்கை

## மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் ஆணை

**மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் உணவுத் துறை உயர் அலுவலர்கள் மற்றும் ஆய்வு குழுவினர்களுடன் இன்று (05.08.2010) காலை 9.00 மணிக்கு அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள நியாயவிலைக் கடைகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள்.**

**பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் ஒவ்வொரு வட்டந்தோறும் நியாயவிலைக் கடைகளில் பொது விநியோகத் திட்டச் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்கு, துணைப்பதிவாளர் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர்களின் தலைமையில் 14 குழுக்களை அமைத்து அவர்களை 05.08.2010 காலை 9.00 மணிக்கு ஆய்வுப் பணி மேற்கொள்ள அனுப்பிய பிறகு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், உணவுத் துறை முதன்மைச் செயலர், உணவு பொருள் வழங்கல் துறை இணை ஆணையாளர், நுகர்பொருள் வாணிபக் கழக பொது மேலாளர் (தரக் கட்டுப்பாடு) மற்றும் உயர் அலுவலர்களுடன் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விளந்தை நியாயவிலைக் கடை, வடவீக்கம் கல்லாத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் தண்டலை நியாயவிலைக் கடை, தத்தனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் க.சோழன்குறிச்சி நியாயவிலைக் கடை, ஜெ. சுத்தமல்லி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் நியாயவிலைக் கடை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஜெயங்கொண்டம் மற்றும் அரியலூர் நகர அமுதம் நியாயவிலைக் கடை, அரியலூர் கிடங்கு, பெரம்பலூர் மாவட்டத்தில், குன்னம் கிடங்கு, குன்னம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் குன்னம் மற்றும் மேலமாத்தூர் நியாயவிலைகடை, பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் ஆகியவைகளில் ஆய்வு மேற்கொண்டார்கள்.**

**ஆண்டிமடம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விளந்தை நியாயவிலைக் கடையில் வரிசையில் நின்றிருந்த பொது மக்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விசாரணை செய்தபோது, பொருள்கள் எடை குறைவில்லாமலும், தரமாகவும் உள்ளதாகவும், கோதுமை மட்டும் தங்களுக்கு சரியாக வழங்கப்படுவதில்லை என்றும் குறை கூறினார்கள். பொதுமக்கள் தெரிவித்த குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்யும்படி ஆணையிட்டார்கள்.**

**வடவீக்கம் கல்லாத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் தண்டலை நியாயவிலைக் கடையில் வரிசையில் நின்றிருந்த பொது மக்களிடம் விசாரணை மேற்கொண்டபோது பொருட்கள் தங்களுக்கு எடை குறைவாக வழங்கப்படுவதாக தெரிவித்ததைத் தொடர்ந்து அவர்களுக்கு எடை போட்டு வழங்கப்பட்டிருந்த பொருட்களை மறு எடை போட்டு**

**பார்த்ததில், சில குறைபாடுகள் இருந்தது கண்டறியப்பட்டு கடையின் விற்பனையாளர் திரு. என். தர்மராஜ் என்பவரை தற்காலிகப் பணிநீக்கம் செய்ய ஆணையிட்டார்கள்.**

**தத்தனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் க.சோழன்குறிச்சி நியாயவிலைக் கடை மற்றும் கடைக்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாக சென்று ஆய்வு மேற்கொண்டபோது பொருட்கள் முறையாக வழங்குவது விசாரணையின் மூலம் தெரியவந்தது. இருப்பினும், கடை விற்பனையாளர் திரு. ராஜேந்திரன், நீண்ட நாட்களாக அரிசியை கடையில் வைத்திருந்தது ஆய்வின்போது கண்டறியப்பட்டு, அவர் மீது துறை நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிட்டார்கள்.**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஜெயம்கொண்டம் அமுதம் நியாயவிலைக் கடை ஆய்வின்போது, நியாயவிலைக் கடைக்கு அடுத்த கதவு எண் மற்றும் அருகிலுள்ள குடும்ப அட்டைகளை 1 கி.மீ. தூரத்திற்கு மேல் உள்ள நியாயவிலைக் கடைகளில் இணைத்துள்ளதாக பொது மக்கள் புகார் தெரிவித்ததைத் தொடர்ந்து, உடனடியாக அவ்வாறு உள்ள குடும்ப அட்டைகளை மாற்றி அருகிலுள்ள கடைகளில் இணைக்க நடவடிக்கை எடுத்திடும்படி ஆணையிட்டார்கள்.**

**ஜெ. சுத்தமல்லி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் நியாயவிலைக் கடையில் ஆய்வு மேற்கொண்டபோது அனைத்து பொருட்களுக்கும் தங்களுக்கு முறையாகவும், தரமாகவும் வழங்கப்படுவதாக பொது மக்கள் தெரிவித்ததைக் கண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்தி தெரிவித்தார்கள்.**

**அரியலூர் நகர அமுதம் கடையின் ஆய்வின்போது, ரத்து செய்யப்பட்ட குடும்ப அட்டைகளின் விவரங்களை வழங்கல் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, ‘அ’ பதிவேட்டில் பதிவுகள் செய்யாதது கண்டறியப்பட்டதால், கடை விற்பனையாளர் திரு. டி. பெரியசாமி என்பவரை பணி மாறுதல் செய்யவும், இக்கடையில் 100 சதவீத தணிக்கை மேற்கொள்ளவும் ஆணையிட்டார்கள்.**

**அரியலூர் மற்றும் பெரம்பலூரின் குன்னம் கிடங்கின் ஆய்வின்போது, கிடங்குகளிலிருந்து கடைகளுக்கு அனுப்பப்படும் பொருட்கள் Route Chart**படி அனுப்பப்படுகிறதா என்பதையும், சமச்சீர் எடையிடப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்த **(Standardised bags)** மூட்டைகளை மறு எடை போட்டு பார்த்து, எடை சரியாக இருந்ததை கண்டறிந்தார்கள்.

**அடுத்து ஜெயங்கொண்டத்திலிருந்து அரியலூர் செல்லும் வழியில் சாலை ஓரத்தில் ‘நூறு நாட்கள் வேலை உறுதி திட்டத்தில்’ பணி புரிந்து கொண்டிருந்த பெண் தொழிலாளர்களிடம் அவர்களுக்குரிய ரேஷன் கடையிலிருந்து பொருட்கள் முறையாக அவர்களுக்கு வழங்கப்படுகிறதா என்பதை கேட்டறிந்து திருப்தி அடைந்தார்கள்.**

**குன்னம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் குன்னம் மற்றும் மேலமாத்தூர் நியாயவிலைகடை, மற்றும் கடைக்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாக சென்று ஆய்வு மேற்கொண்டபோது பொருட்கள் அனைத்தும் முறையாக வழங்குவது விசாரணையின் மூலம் தெரியவந்தது.**

**மேலும், பொது விநியோகத் திட்டப் பொருட்கள் வழங்குவது மற்றும் விற்பனையாளர்களின் சேவையில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் உடனடியாக அந்தந்த நியாயவிலைக் கடைகளிலே உள்ள புகார் தெரிவிக்கப்பட வேண்டிய தொலைபேசி எண்களுக்கும், மாநில நுகர்வோர் சேவை மையம் எண்.**28592828**க்கும், புகார்களைத் தெரிவிக்கும்படி அறிவுறுத்தினார்கள்.**

**தல ஆய்வு முடிவு பெற்ற பின்னர், மாலை** 4.00 **மணிக்கு பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கத்தில் உணவுப் பொருள் வழங்கல் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களின் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.**

ஆய்வு கூட்டத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் உரையாற்றுகையில் நியாயவிலைக் கடை என்பதை பொது மக்கள் அறியும் வண்ணம் அனைத்து நியாயவிலைக் கடைகளையும் ஒரே வண்ணத்தில் பெயிண்ட் அடித்து கடையை சுத்தமாக வைத்துக் கொள்ளபட்டுள்ளதை அறிந்து பாராட்டினார்கள். வட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் கூட்டுறவு சார்பதிவாளர்(பொ.வி.தி) ஆகியோர்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் தக்க பயிற்சி அளிக்க வேண்டும் என்று ஆணையிட்டார்கள். அரியலூர் மற்றும் பெரம்பலூர் குன்னம் கிடங்குகளில் ஒட்டடை மற்றும் தூசி அதிக அளவில் இருந்ததால், கிடங்கினை சுத்தம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி, மாதம் 2 முறை ஒட்டடை மற்றும் தூசிகளை நீக்கி கிடங்கினை சுத்தமாக வைத்துக் கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணையிட்டார்கள்.

மேலும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வின் போது வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய அரிசி (SGRY) இன்னமும் நியாயவிலைக் கடைகளில் இருப்பில் உள்ளதையும், ரத்து செய்யப்பட்ட குடும்ப அட்டைகளின் விவரங்கள் வழங்கல் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது. ஆனால் அ பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யப்படுவதில்லை என்பதையும், ரத்து செய்யப்பட்ட குடும்ப அட்டைகள் குறித்து பதிவேட்டில் பென்சிலால் சுழிக்கப்படுகிறது. எனவே, இதை சிவப்பு மையினால் சுழிக்கப்பட்டு ரத்து செய்யப்பட வேண்டும் என்றும், கடைகளுக்கு வரும் மூட்டைகளில், அந்த மூட்டை கடைக்கு வந்த தேதி குறிக்கப்படுவதில்லை என்பதையும், நியாயவிலைக் கடை பணியாளர்களின் வருகைப் பதிவேட்டினை மேற்பார்வை அலுவலர்கள் ஆய்வு செய்வதில்லை என்பதையும், நியாயவிலைக் கடைக்கு அடுத்த கதவு எண் மற்றும் அருகிலுள்ள குடும்ப அட்டைகளை 1 கி.மீ. தூரத்திற்கு மேல் உள்ள நியாயவிலைக் கடைகளில் இணைத்துள்ளதை கண்டறிந்த மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த குறைபாடுகளை உடனடியாக களைய வேண்டும் என்று ஆணையிட்டார்கள்.

வட்ட வழங்கல் அலுவலர்களின் கடமைகள், பொறுப்புகள், அலுவலத்தில் பெறப்படும் மனுக்கள் தீர்வு, குடும்ப அட்டைகள் தகவல் தொகுப்பை மேம்படுத்தி “அ” பதிவேட்டுடன் சரிபார்த்தல், அத்தியாவசியப் பொருட்களை ஆன்லைன் முறையில் ஒதுக்கீடு செய்தல் போன்ற இனங்களின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு செய்ததுடன், ஒவ்வொரு மாதமும் நடைபெறும் வட்ட அளவிலான மக்கள் குறை தீர் கூட்டங்களில் பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும் உடனுக்குடன் தீர்வு செய்ய அறிவுறுத்தினார்கள்.

அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் திடீர் ஆய்வுக்கு அனுப்பப்பட்ட 14 ஆய்வுக் குழுக்களின் அறிக்கைகளை ஒவ்வொன்றாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தினார்கள்.

அதன் பிறகு மாவட்ட வழங்கல் அலுவலர், மண்டல இணைப்பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஆகியோர்களின் செயல்பாட்டினை தனித்தனியாக ஆய்வு செய்து எவ்வித குறைபாடுகளுமின்றி செயல்பட அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், திரு. ஸ்வரன் சிங், இ.ஆ.ப., முதன்மை செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, திரு. சி.என். மகேஸ்வரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. டி. ஆபிரகாம், இ.ஆ.ப., அரியலூர் மாவட்ட ஆட்சியர், திரு. எம். விஜயகுமார், இ.ஆ.ப., பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் மாவட்ட உயர் அலுவலர்கள் மற்றும் ஆண்டிமடம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர், ஜெயங்கொண்டம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு.கே.இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9